ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1719/24 - 2011 අගෝස්තු 18 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.08.18

*1719/24 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

***செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தல்கள்***
***(இ. ச. வா. 423 ஆம் அத்தியாயம்)***

*செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7 மற்றும் 31 இன் நியதிகளில் அனுமதி வழங்குதல்*

*1. **அனுமதி இத்தால் பின்வருமாறு வழங்கப்படுகிறது :-***

(i) *செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7 (அ) இன் ஏற்பாட்டு நியதிகளுக்கிணங்க இலங்கையில் உள்ள ஆட்கள், வதிவற்ற இலங்கையர்களுக்குச் சொந்தமான, இலங்கையிலுள்ள உண்மைச் சொத்துக்களை கொள்வனவு செய்யும் நோக்கத்திற்கு வசதியளிக்கும் விதத்தில் அத்தகைய வதிவற்ற இலங்கையர்களுக்கு இலங்கை ரூபாவில் கொடுப்பனவுகளைச் செய்வதற்காக அல்லது வரவு வைப்பதற்காக அனைத்துக் கொடுப்பனவுகளும் கீழேயுள்ள பந்தி (ii) இற்கிணங்க விற்பவரின் பெயரில் இலங்கையிலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுடன் திறக்கப்பட்டுள்ள "வதிவற்றோர் தடுத்து வைக்கப்பட்ட கணக்குகள்" இற்கு வரவு வைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு கொடுப்பனவுகளைச் செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.*

(ii) *செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 31 இன் ஏற்பாட்டு நியதிகளின்படி, வதிவற்ற இலங்கையர்களுக்குச் சொந்தமான உண்மைச் சொத்துக்களை விற்பதற்கு அவர்களின் பெயரில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வதிவற்றோர் தடுத்து வைக்கப்பட்ட கணக்குகளைத் திறக்கலாம். எனினும் அத்தகைய கணக்குகளிலிருந்தான வெளிமுகப் பணவனுப்பல்கள் காலத்திற்குக் காலம் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் விடுக்கப்படும் பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டனவாக இருத்தல் வேண்டும்.*

பி. எச். ஓ. சந்திரவன்ச,
***செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.***

கொழும்பு,
*2011, ஓகத்து 18.*

*9- 102*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*